**செ.வெ.எண்:72** **நாள் : 25.11.2017**

**<u>கரூர் மாவட்ட மைய நூலகத்தில் குரூப்–IV, (கிராம நிர்வாக அலுவலர்) தேர்விற்கு இலவச பயிற்சி</u>**

தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை கரூர் மாவட்ட மைய நூலகத்தில் தற்போது (தொகுதி IV, கிராம நிர்வாக அலுவலர்) பணியிடங்களுக்கான இலவச பயிற்சி வகுப்புகள், 28.11.2017 தேதி முதல் நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிற்சி வகுப்புகள் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு துவங்கப்பட்டுள்ளது. இவ்வகுப்பில், முந்தைய தேர்வுகளின் மாதிரி வினாத்தாள்கள் மற்றும் தேர்விற்கான பாடக்குறிப்புகள் வழங்கப்படும். மேலும், வாரம் ஒருமுறை தேர்வு மற்றும் பயிற்சி இறுதியில் மாதிரித் தேர்வுகளும் நடத்தப்பட உள்ளன. இப்பயிற்சியில் சேர விரும்பும் இளைஞர்கள் 28.11.2017 அன்று தொடங்கப்படும் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ளும் விதமாக மாவட்ட மைய நூலகர் அவர்களை நேரில் அனுகுமாறு கேட்டுககொள்ளப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு மாவட்ட மைய நூலகர், கரூர் அவர்களை தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தொடர்புக்கு – 04324 – 263550.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**